# Gospel Truth

# காஸ்பெல் ட்ருத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 17 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 17


## தகுதியான வேலையாட்களை அனுப்பும்

கி.மு 759 ஆம் ஆண்டில் ஏசாயா தீர்க்கதரிசிக்கு கர்த்தராகிய ஆண்டவருடைய சத்தம் இவ்வாறாக தொனித்தது. “ யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் ” (ஏசாயா 6 : 8). தேவையுள்ள ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை கொண்டு செல்பவர் யார்? தேவனுடைய விலையேறப்பெற்ற ஊழியத்துக்கென்று தங்களுடைய நேரத்தையும், திறமையையும் முழு அர்ப்பணிப்போடு செயல்படுத்த யார் தயார்? பரலோகத்திலிருந்து வரும் தேவவார்த்தைக்கு கீழ்ப்படிந்து தம் வாழ்வை அர்ப்பணிக்க யார் தயார்?

சுவிசேஷ பணிக்கென்று தன்னைத் தான் வெறுத்து , யார் நம்மை கைவிட்டாலும் தேவனுக்காய் ஓட யார் தயார்? ஒவ்வொருவரிடமும் அன்பு காட்டி தேவனுடைய பரிசுத்தத்தையும், விசுவாசத்தையும் எடுத்துச் செல்ல யார் தயார்? தேவ ஆவியானவரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, ஏசாயா தீர்க்கதரிசி இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றார் (ஏசாயா 6 : 8).

அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் (மத்தேயு 9 : 37). அழிந்து போய்க் கொண்டிருக்கிற இந்த உலகத்துக்கு நித்திய ஜீவனை தரும் இரட்சிப்பின் வார்த்தைகளை கொண்டுசெல்ல, பலிபீடத்திற்கு தம்மை உயிரான பலியாக ஒப்புக்கொடுத்து,

சீர்கேடுகள் நிறைந்த இவ்வுலகில், பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் திகழ்ந்து, அவருடைய பரிசுத்தபணியை செய்யும்படியாய் தேவன் ஒவ்வொருவரையும் அழைக்கிறார்.




விசுவாசத்தில் வல்லவர்களான வர்களை பிதாவாகிய தேவன் தம் பணி செய்திட அழைக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு நிறைவானபடி, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அழைப்பு உண்டு. ஆகவே அநேக போதகர்களும், ஊழியர்களும், மிஷனெரிப் பணியாளர்களும் தேவபணிக்கு ஆவிக்குரிய வாழ்வில் பெலனுள்ளவர்களாக தேவை.

பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும் (2 தீமோ 2 : 6). தேவனுடைய ஊழியத்தைச் சிறப்பாக செய்ய முதலாவது தேவஊழியக்காரர் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். இந்த ஆவிக்குரிய அஸ்திபாரத்தின் வழியாகத் தான் நம்பிக்கையின் போதனைகளை செய்ய முடியும்.

அதுபோலவே, ஒருவர் தேவனுடைய ஊழியத்திற்கு செல்லும் முன்பாக பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும் (அப்போ 1 : 8). கர்த்தருடைய அழைப்பிலே பணியாற்று வதற்கான வழிகாட்டியாய் பரிசுத்த ஆவியானவர் இருப்பார். சத்துவத்தையும், வல்லமையையும் அபிஷேகத்தையும் தந்து


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி தேவனுடைய ஊழியம் | ஒருநோக்கு செய்தி தேவனுடைய ஊழியம் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை**- அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15

நம்மை தேற்றுபவர் அவரே.உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள் (1 பேது 5 : 2-3). விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (1 தீமோ 4 : 12).மேலும் கண்காணியானவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று 1 தீமோ 3 : 1-7 & தீத்து 1 : 7-9 ஆகிய வசனங்களில் குறிப்பிட்டுள்ளபடி, கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாயும் இருக்க வேண்டும்.கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் (2 தீமோ 2 : 24) நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும் (1 தீமோ 5 : 21) மதுபானப்பிரியனாய் இருக்ககூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரன் போதக சமர்த்தனாயும் (2 தீமோ 2 : 4) புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார் (2 கொரி 3 : 5-6). பாடத்தெரியாத ஒரு பாடகரையோ அல்லது கற்பிக்கத் தெரியாத ஒரு ஆசிரியரையோ அல்லது போதிக்கத் தெரியாத ஒரு போதகரையோ ஜனங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.ஆகவே கர்த்தர் கொடுத்த தாலந்தைப் பயன்படுத்தி ஜனங்களை கர்த்தருக்கு நேராய் வழிநடத்த பிரயாசப்பட வேண்டும்.

தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் (1 கொரி 12 : 18).உண்மையான தேவனுடைய ஊழியக்காரர் என்பவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின்பேரிலோ அல்லது மனுஷரால் நியமிக்கப்பட்டவர்களோ அல்ல.பரிசுத்த ஆவியானவராலே தகுதியாக்கப் படுகிறார்களே தவிர தாங்கள் கற்றுத் தேர்ந்த உலகப் பிரகாரமான படிப்பறிவின் தகுதியினால் அல்ல.கர்த்தருடைய சத்தம் இன்னும் ஒவ்வொருவரையும் தம் பணிக்காய் அழைக்கும் விதமாய் ஓயாமல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது..நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16 : 15). தேவனுடைய விலையேறப்பெற்ற பரம அழைப்புக்கு கீழ்ப்படிந்து, ஆத்தும அறுவடைப் பணிக்காக சுவிசேஷ ஊழியம் செய்யும் மிகப்பெரும் பொறுப்பை விட, வேறு எந்த பெரிய நோக்கமும், அழைப்பும் வேறொன்றுமேயில்லை.

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

---


**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள். அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே- ரோமர் 10 : 14-15.

சுவிசேஷத்தினிமித்தம் ஏற்பட்ட பல பாடுகளை சகித்துக்கொண்டு வாழ்ந்து மறைந்த எண்ணற்ற ஊழியர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.அவர்கள் பரலோக சிந்தையுடையவர்களாய், பரமனின் பணிக்கு தங்களை அர்ப்பணித்து, அவருடைய சத்தியத்தைப் போதித்து, நியாயத்தீர்ப்புக்கென்று பலரை ஆயத்தப்படுத்தி சென்றார்கள். சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் மரண இருள் விலகி, அவர்களுடைய வாழ்வு செழிப்பாகும்.

சபைப்பாகுபாடுகள் நிறைந்த இவ்வுலகில் ஊழியஞ்செய்யும் பல போதகர்கள் ஜனங்களுடைய இருதயத்திற்கேற்றவிதமாய் போதித்துவிட்டு, உண்மையான இரட்சிப்பையும், பாவத்தைவிட்டு மனந்திரும்புதலையும், பரிசுத்த ஆவியையும் குறித்து போதிக்கத் தவறிவிடுகிறார்கள்.ஆனாலும் தேவசத்தியம் என்றும் அழியாது நிலைத்திருந்து, கிறிஸ்து இயேசுவின் வல்லமையின் கரத்தினால் அநேகர் மீட்கப்படுவார்கள்.

இந்த இதழில் ஊழியத்தைக் குறித்துப் பார்ப்போம்.தேவ அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, ஊழியஞ்செய்ய அநேகர் இந்த நாட்களில் தேவை.கிறிஸ்தவத்தின் பெயரையே அழிக்கும் வண்ணமாக பல பாசாங்கான ஊழியங்களே இன்று நடைபெற்று கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் விசுவாசிகளோடு இணைந்து வேதப்பிரமாணங்களைக் கற்று போதிக்க வேண்டும். வேதத்தின் அளவுப் பிரமாணங்களைக் கைக்கொள்வதில் நண்பர்களாயினும், குடும்ப உறுப்பினர் களாயினும் யாருக்கும் விதி விலக்கல்ல.கர்த்தரைச் சார்ந்து தாழ்மையாயிருக்கவும், ஊழியர் கற்றுக்கொள்ள வேண்டும். தேவசபையின் முக்கியமான கட்டளை யாதெனில், கர்த்தருடைய அழைப்பின் பணியைச் செய்யும் எந்தவொரு ஊழியக்காரரும், சுய முக்கியத்துவம் கொண்ட உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க கூடாது.

ஊழியர்கள் சிலசமயங்களில் சோதனைகளின் வழியாக கடந்து செல்ல நேரிட்டாலும், பரிசுத்த ஆவியின் அபிஷேக வல்லமையால் பலங்கொண்டு திடமனதாயிருங்கள்.தம் சத்தத்தை எக்காளதொனி போல உயர்த்தி, போதக சமர்த்தனாய் தனிச்சிறப்பான போதனைகளை போதித்து, உற்சாக மனதோடே பக்திவைராக்கியமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். சில ஊழியக்காரரின் பிரசங்கங்கள் சில சமயங்களில் ஜனங்கள் விரும்புகிறவிதமாக இல்லாவிடில், அதைக்குறித்து ஜனங்கள் நேர்மையாக கூறுவதை விட்டு விட்டு, அந்த போதகரைக் குறித்து விரும்பாதவண்ணம் பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.ஆகவே பரிசுத்தஆவியின் பெலத்தோடு உபதேசியுங்கள்.

சமரசமான வார்த்தைகளைப் பேசுவது சமரசத்தைக் கொண்டுவரும். கடிந்து கொள்ளும் உபதேசமானது மனக்கடினத்தைக் கொண்டு வரும்.ஆகவே வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாமல் கர்த்தருடைய வார்த்தைக்கு நேராக மாத்திரம் வழிநடத்திச் செல்லுங்கள்.

அபிஷேகித்தல் குறித்து இந்த இதழில் விவரித்துள்ளோம்.அபிஷேகித்தல் என்பது கிறிஸ்தவ போதகர்களாலும், பரிசுத்தவான்களாலும் புரிந்துகொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான வேதசத்தியம். இந்த போதனையினின்று சிலர் விலகினாலும் கடினமான சில சூழ்நிலைகளில் இந்த போதனையும் தேவையாகவே உள்ளது. மனுஷர்களுக்குப் பயந்து போதிப்பதை விட கர்த்தருக்குப் பயந்து நடப்போம். தேவஆவியிலும், கற்பனைகளிலும் திடனுள்ளவர்களை அபிஷேகித்து அங்கீகரிப்பது ஆசீர்வாதமே.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*



**வேதத்தில் சொல்லப் பட்டுள்ள ஊழியக்காரரின் தகுதிகள் :-**

அப்போ 1 : 8 பரிசுத்தஆவியால் நிரப்பப்பட வேண்டும் (லூக் 24 : 49) 2 தீமோ 2 : 24 போதக சமர்த்தனாயிருக்க வேண்டும் (1 தீமோ 3 : 2) 2 கொரி 3 : 5-6 எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது (தீத்து 1 : 9) 2 தீமோ 2 : 6. பலனில் முந்திப் பங்கடைய வேண்டும். 1 பேது 5 : 2-3 மனப்பூர்வமாயும் மந்தைக்கு மாதிரிகளாகவும் இருங்கள் (1 தீமோ 4 : 12) அப்போ 20 :19 மனத்தாழ்மை1 தீமோ 3 : 1-7 & தீத்து 1 : 7-9 குற்றஞ் சாட்டப்படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாயிருக்க வேண்டும். பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை இல்லாத வனுமாயிருந்து, தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாய் இருக்க வேண்டும்.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : தேவனுடைய ஊழியம்

**வேத வாசிப்பு:** மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராகும்வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் - எபேசியர் 4 : 11,12

**விளக்கம்:** தேவனால் அழைக்கப்பட்ட ஊழியக்காரர்கள், தகுதியுள்ளவர்களாகவும் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

### I.ஊழியத்தின் நோக்கம்

A. மத்தேயு 28 : 19-20 நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி

B. மாற்கு 16 : 15-16 நீங்கள் உலக மெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்

### II.ஊழியத்தின் பணிகள்

A. 2 கொரி 5 : 20 கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள்

B. 1 கொரி 4 : 1 தேவனுடைய இரகசியங் களின் உக்கிராணக்காரனென்றும்

C. பிலி 1 : 7 நான் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி

### III.ஊழியரின் பொறுப்புகள்

A. ஏசாயா 58 : 1 சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே

B. ஏசாயா 62 : 6-7 இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்

C. எரேமி 23 :1-5 விசுவாசமுள்ள மேய்ப்பர்கள்

D. எசேக் 3 : 17-21 என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக

### IV.தேவனுடைய வார்த்தையை போதிக்கும் கடமை

A. எபேசி 3 : 8-9 கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதி களிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிற தற்காக

B. அப்போ 5 : 19-20 இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்

C. அப்போ 20 : 26-31 தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

D. தீத்து 2 : 15 நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள்

### V.போதித்தலின் தன்மை

A. 2 கொரி 4 : 5 கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக் காரரென்றும் பிரசங்கிக்கிறோம்

B. 1 கொரி 2 : 1-5 என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற் குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.

C. 1 பேது 4 : 11 ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்

D. எபேசி 4 : 15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு

E. அப்போ 20 : 20, 27 பிரயோஜன மானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல்

F. 1 தெச 2:4-5 நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களை சோதித்தறிகிற தேவனுக்கே பிரிய முண்டாகப் பேசுகிறோம் (கலா 1 : 10-11).

G. மத்தேயு 10 :28 சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்.

H. 2 கொரி 3 :12 மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்

### VI.பிற ஊழிய சேவைகள்

A. 1 தெச 5 : 14 திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்

B. 2 தீமோ 2 : 15 சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு(1 தீமோ 4 :14-16)


C. மத் 10 : 7-8 இலவசமாய் கொடுங்கள்

**முடிவு :** ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத் தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு, புத்தி சொல்லு...நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி,சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று - 2 தீமோ 4 : 2-5

# தேவ ஊழியம்

**தேவனுடைய அழைப்பு**
தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்தம் பணிக்கு தகுதியான அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்களை அழைக்கிறார். தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசி 4 : 13). நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்(மாற் 16 : 15-16).

தேவனுடைய வார்த்தையை அறிவிக்கும் சுவிசேஷப்பணியானது மிகவும் விலையேறப்பெற்றது அது நித்தியஜீவனைப் பெற்று தரும். கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை (1 தீமோ 3 : 1) . சாதாரணமான வேலையாக எண்ணுவதற்கு இது அலுவலகமல்ல.ஊழியம் என்பது பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்ட தேவ ஊழியக்காரர்களின் விசேஷித்த பணி.




**தகுதியான வேலையாட்கள்**
ஊழியக்காரர்கள் தேவனுடைய அழைப்புக்குக் கீழ்படிந்து, அவருடைய பணியை வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் செய்ய வேண்டும். அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள் (எபேசி 4 : 1). தங்கள் நடத்தை, ஆவி, ஆத்துமா, சரீரம், நடை, உடை, வாழ்க்கைமுறை இவை எல்லாவற்றிலும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாய் வாழக்கடவோம்.தகுதியற்றவர்களாய், தேவஊழியத்தை செய்ய ஒருபோதும் வரக்கூடாது.வேதப்பிரமாணங்களைக் கைக்கொண்டு அதன்படி நடந்து, தேவஅழைப்புக்கு பாத்திரவான்களாக எண்ணப்படுவோரே ஊழியஞ்செய்ய தகுதியுடையோர்.தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன் (1கொரி 4 :1). தேவபணியை தொடர்ந்து செய்யமுடியாதபடி உலகமெங்கும் பல தடைகள் ஏற்படுவதற்கு காரணம் நம்மிலே பல கள்ளபோதகர்களும், தகுதியற்ற தேவ ஊழியர்களும் தவறான முறையில் வேதசத்தியத்தை கையாளுவதுதான்.மதம் என்பதே இன்று பல போதகர்களின் வியாபாரமாகி விட்டது.உண்மையான ஊழியர் ஜனங்களின் சேவகர்களாக இருக்க வேண்டும்.தங்களுடைய சுயலாபத்திற்காக அல்ல. ஜனங்களின் ஆத்துமா இரட்சிப்படைய உழைக்க வேண்டும். உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள் (1 பேது 5 : 2-3).இலவசமாய்ப பெற்றீர்கள். இலவசமாய்க் கொடுங்கள் (மத் 10 : 8).

**மதில்களின் மேலுள்ள ஜாமக்காரர்**
பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள ஊழியக்காரரைக் குறித்த காரியங்கள் எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். (ஏசா 62 : 6) கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே. எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி (ஏசாயா 58 : 1).கர்த்தர் அவர்தம் ஜனங்களின் வாழ்வின் இரட்சகராய் இருக்கும் வண்ணம், ஊழியக்காரரை மதில்மேல் உள்ள ஜாமக்காரரைப் போல் வைத்திருக்கிறார்.நீதிமான் பாவஞ்செய்யாவிட்டால் அவன் பிழைக்கவே பிழைப்பான்.அவன் எச்சரிக்கப்பட்டான் (எசேக் 3 : 17-21). கர்த்தருடைய வார்த்தையை ஊழியக்காரர் சரியாய் போதித்தும், ஜனங்கள் மீறுதல்களுக்குட்பட்டால் அவனுடைய இரத்தபழி அவனையே சாரும்.தேவனுடைய ஊழியர் என்பது எப்பேற்பட்ட மகத்துவமான பணி என எண்ணிப் பாருங்கள்.

**சத்தியத்தைப் போதிக்கவேண்டிய கடமை**
கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (எபேசி 3 : 8).நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்(அப்போ 5 : 20). இயேசு கிறிஸ்துவின் வழியாக நாம் பெற்ற இரட்சிப்பையும், நம்பிக்கையையும் குறித்து பிறருக்கு போதிப்பது எவ்வளவு மகிழ்ச்சியான காரியம். ஊழியக்காரர்கள் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல இருக்க வேண்டும். எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயி ருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றையதினம் சாட்சிகளாக வைக்கிறேன்(அப்போ 20 : 27).

இவ்வாறு கூறுகிறார் என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது (1 கொரி 2 : 1-5). நியாயத்தீர்ப்பு என்பது சத்தியத்தின் வழியாக வரும். அதற்கு அடித்தளம் அன்பு. அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார் (எபேசி 4 : 15).சில ஊழியர்கள் அன்பை போதிக்க தவறி நியாயத்தீர்ப்பை மாத்திரம் போதிக்கிறார்கள்.சிலர் தேவனுடைய அன்பை போதிப்பார்கள்.ஆனால் அந்த அன்பிலே பரிபூரணமாய் வளர்ந்து அழியாத ஆத்துமாவைக் காக்க தவறி விடுகிறார்கள். ஆகவே தான் சமச்சீரான ஊழியம் தேவை.

நம்முடைய போதனைகளுக்கு எதிர்ப்புகள் வந்தாலும் உண்மையான சத்தியத்தைச் சொல்ல தயங்க கூடாது. இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங் கொடாதிருப்பாயாக (தீத்து 2 : 15). நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம் (1 தெச 2 : 4-5) .



**அக்கறையான ஊழியம்**
தீமோத்தேயு இவ்வாறு அறிவுறுத்துகிறார் : சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு (2 தீமோ 4 : 2).

சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்.

**மந்தையின் மேய்ப்பர்**
உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப்போ 20 : 28). ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்.எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக (1 பேதுரு 4 : 11). வசனத்தைப் போதிக்கும் ஊழியர்கள் தங்களுடைய சொந்த கருத்தையோ, பாரம்பரியத்தையோ போதிக்காமல், மாறாத சத்தியத்தையும், பரிசுத்தத்தின் அடித்தளத்தையும் போதிக்க வேண்டும்.

ஒரு உண்மையான தேவஊழியர் எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிப்பதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல என சிந்திக்க கடவீர்கள் (2 கொரி 3 : 5-6).நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம் (2 கொரி 4 : 5). கிறிஸ்துவே எல்லா ஊழியத்துக்கும் தலைவராவர்.மனிதனல்ல

**பாதுபாடற்ற ஊழியம்**
கர்த்தருடைய பரிசுத்தஆவியானவரால் ஏவப்பட்டு விசுவாச வார்த்தைகளை அறிந்து, அவருடைய வழியில் நடந்து அபிஷேகிக்கப்பட்ட தேவமனுஷனால் தேவவசனம் போதிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல்

நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். திடனற்றவர்களைத் தேற்றுங்கள்.பலவீனரைத் தாங்குங்கள்.எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் (1 தெச 5 : 14).அவன் பொறுமையும், அன்புள்ளவனும், மந்தையை கவனிக்கும் ஆயனாகவும், தலையாய கண்காணியானவனும், ஜனங்களை நேசிக்கிறவனாக இருக்கக் கடவன்.

**ஆயத்த ஊழியம்**
தேவனுடைய அழைப்பை ஏற்று, ஊழியத்தைச் சிறப்பாக செய்ய தேவவார்த்தையை தியானம் செய்வது ஊழியக்காரரின் கடமை.நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோ 2 : 15). நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு (1 தீமோ 4 : 14-16).மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம் (2 கொரி 3 : 12) . தேவனுடைய சித்தத்தை தெளிவாய் போதித்து , ஜனங்கள் உணர்வடையும் விதமாய் தெளிவுபடுத்துங்கள்.

**நம்பிக்கை ஊழியம்**
ஒவ்வொரு உண்மையான தேவஊழியர்களும் கர்த்தருக்கு கீழ்படிந்து, தேவனுடைய அழைப்புக்கு மகிமையாய் பரலோக சித்தம் செய்யக்கடவோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், அன்பும் வல்லமையும், அபிஷேகமும், பரிசுத்த ஆவியானவரும் உங்களுடனே கூட இருப்பாராக ஆமென்.

# கேள்விக்கு என்ன பதில்?

**அபிஷேகித்தல் என்பது என்ன?**
ஒரு ஊழியக்காரரின் அழைப்பையும், அவர்தம் தகுதியையும் உறுதிப்படுத்தும் படி, மற்ற தலைமை ஊழியர்களி டமிருந்து, பவுல் கூறியதைப் போன்று பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் (தீத்து 1 : 5) என்று கூறுகிறார். அபிஷேகித்தல் என்பதன் அர்த்தம் நியமனம், ஒழுங்குபடுத்துதல், சீர்படுத்துதல். பவுல், தீமோத்தேயுவிடம் நான் உன்மேல் என் கைகளை வைத்தினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். (2 தீமோ 1 : 6).

ஊழியத்திற்கென்று வேறு பிரித்தெடுக் கப்பட்டவர்களுக்கு, சபை கொடுக்கும் ஓர் அங்கீகாரம். அப்போ 13 : 2-4 யை கவனியுங்கள்.அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.அவர்கள் பரிசுத்தஆவியானவர்தாமே தம் ஊழியத்துக்கென்று ஒவ்வொருவரையும் அழைத்து, தகுதிப்படுத்தி வரங்களினால் நிறைத்து அனுப்புகிறார்.

தேவஊழியர்களும், போதகர்களும் கர்த்தராகிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, தெய்வீக வல்லமையின் அதிகாரம் கொடுக்கப்பட்டவர்கள். பரிசுத்த ஆவியானவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்மேல் கைகளை வைத்து வேதப்பிரமாணங்களின்படி அங்கீகாரம் தருவதே அபிஷேகித்தல்.

டிசம்பர் 1979 ல் சகோ ஆஸ்டிஸ் வில்சன் தனது பெயித் & விக்டரி நூலில் எழுதிய சிலவற்றைக் காணலாம்: முதலாவது ஒரு போதகர் சுதந்தரமாக தேவனுடைய பணியை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். மற்ற தேவமனுஷர்களிடையேயும், பரிசுத்தவான்கள் மத்தியிலும் இவருக்கு வேண்டிய அங்கீகாரமும், ஆதரவும் சரியாக கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதேபோல ஒரு ஊழியர் மூப்பர் அல்லது கண்காணி என்கிற சபை சங்கத்தின் பொறுப்பை சரியாகச் செய்ய வேண்டுமெனில், அபிஷேகம் பெற்ற ஒரு தேவஊழியர்தாமே அந்த ஊழியர்மேல் தம் கைகளை வைத்து அவரை அபிஷேகப்படுத்த வேண்டும். தேவனுடைய மந்தையாகிய விசுவாச கூட்டத்தாரை சரியான மேய்ச்சலின் பாதையில் நடத்திசெல்ல இது அவசியம். மேலும் சபைச்சங்கத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்படுமாயின் அதுமாதிரியான சூழ்நிலைகளில் நியாயமான முறையில் பேசி, தீர்வுகள் கிடைக்க அங்கீகாரமும், ஆதரவும் பெற்ற ஒரு தேவமனிதரது உதவி ஜனங்களுக்குத் தேவையாய் இருக்கிறது.

தன் வாழ்விலும், ஊழியப் பயணத்திலும் தேவன் அபிஷேகித்த ஒருவர், வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஊழியக்காரரின் தகுதிகளைப் பெற்ற ஒருவரே கண்காணி அல்லது பிஷப் என அழைக்கப்பட பாத்திரவான்கள்.அவர் பரிசுத்தத்திற்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்.போதக சமர்த்தனும், கிறிஸ்துவைப் போன்ற ஆவியையுடையவனாயும் இருக்க வேண்டும்.புதியதாக தேவனுடைய ஊழியத்தை செய்ய வருவோருக்கு உடனடியாக அபிஷேகப்படுத்தக் கூடாது. காலஅவகாசம் கொடுக்கப்பட்டு கர்த்தரின் ஊழியத்தைச் செய்ய பாத்திரவானாய் எல்லாவற்றிலும் தன்னை நிரூபிக்க வேண்டும்.

தன்னை பாத்திரவான் என்று நிரூபிக்கும் வரை ஒரு ஊழியர் சாதாரணமாக அபிஷேகம் பண்ணுவித்தல் கூடாது. ஒரு ஊழியர் தம் தகுதியை நிரூபிக்கும் வரை அபிஷேகித்தல் என்பது கூடாது. அதுபோல ஒருவர்மேல் கைகளை வைத்து அபிஷேகம் செய்ய மிகுந்த காலதாமதமும் கூடாது (கார்வர், சிசில் தேவ சபை கோட்பாடுகள்)

அபிஷேகித்தல் என்பது தீவிரமான ஒரு காரியம்.மிகுந்த கவனத்தோடு, தேவனுடைய அநுக்கிரகத்தோடு செய்யப் பட வேண்டும் (1 தீமோ 5 : 22) ல் பவுல் அறிவுரை கூறுகிறார். ஒருவர்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வைக்காதே ; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே. பட்சபாதத்தோடே மூப்பர் ஒருவர் தவறாக ஒரு ஊழியர் மேல் தம் கைகளை வைத்து அவரை அபிஷேகப்படுத்தி விட்டால் அந்த பாவம் அவரைச் சாரும். ஆவியானவருடைய வழிநடத்துதல் இல்லாமல் எந்தவொரு தலைமைப் போதகரும், பிற ஊழியர்கள் மேல் தம் கைகளை வைக்க ஒப்புக்கொள்ள கூடாது.

**அபிஷேகித்தலின் சரியான நெறிமுறை என்ன?**
வேதத்தின் அடிப்படையில் ஒருவரை ஊழியராக அபிஷேகம் செய்ய அதிகாரம் பெற்ற இரண்டு அல்லது மூன்று மூப்பர்களின் அதிகாரத்தினால் ஒரு தேவமனுஷனை அபிஷேகிக்கும் போது ஊழியத்தின்பால் அவர்கொண்ட விசுவாசமும், ஆதரவும், சபை அங்கிகாரமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.மேலும் சபைச்சங்கத்தின் மூப்பர்களின் உதவியோடு, அவர்கள் முன்னிலையில் வெளிப்படையாக செய்யப்பட வேண்டும்.

அபிஷேகம் செய்யப்படாத ஒரு ஊழியருக்கு புதிதாக அபிஷேகத்திற் கென்று சபைச்சங்க மூப்பரின் முன் வரவழைக்கப்படும் முன், அதுசார்ந்து பணியாற்றக்கூடிய ஒவ்வொரு தேவ ஊழியர் மற்றும் போதகரின் கடமை யாதெனில், அபிஷேகம் பண்ணப்பட வேண்டிய அந்த தேவமனிதனைக் குறித்த அனைத்து கேள்விகளும் முன்வைக்கப்பட்டு அதுசார்ந்து ஞானமாய் விசாரிக்கப்பட வேண்டும். அவரது மனைவி மற்றும் அவர் ஊழியம் செய்யும் சபையின் விசுவாசகூட்டத்தார் யாவரிடமும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். அங்கே மறைக்கப்பட்ட எந்தவொரு பிரச்சனைகளும் இல்லை என உறுதிகொள்ள வேண்டும். அதன் பின்னரே தேவஜனங்களின் மத்தியிலும், மூப்பர்களின் முன்னிலையிலும் அந்த தேவமனிதனின் தலையில் கைகளை வைத்து அபிஷேகித்து, தேவனை துதிப்பது மிகவும் ஆசீர்வாதமான காரியம்.

அபிஷேகித்தல் என்பது ஆவிக்குரிய பண்புள்ள காரியம். ஆகவே அது சார்ந்த சாதகமான அரசியல் தூண்டுதல்கள் இருக்க கூடாது. இன்று சபைகளிலே அபிஷேகித்தல் என்பது எப்போதும் கவனமாகவும், பொறுப்பாகவும் செய்யப் படுவதில்லை. ஆனால் தேவ சபையை நடத்துவதற்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ள பிரமாணங்களை கைக்கொள்வது அவசியம். அவைகள் மதிக்கப்பட வேண்டும்.பரிசுத்த ஆவியின் வல்லமையும், அதிகாரமும் பெற்ற அபிஷேகிக்கப்பட்ட தேவஊழியர்கள் கனத்திற்குரியவர்கள்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY



உங்களுக்குத் தெரியுமா?

## கிறிஸ்தவ உலகில் போதகர்களின் நிலை

75 % அதிக மனஅழுத்தம் நிறைந்தவர்கள்
91% சில கசப்பான அனுபவங்களைக் கொண்டவர்கள்
70% மனச்சோர்வுடன் போராடுபவர்கள்
70% உண்மையான நெருங்கிய நண்பர்கள் இல்லாதவர்கள்
70% சொற்ப வருமானம் உடையவர்கள்
80% ஊழியப்பணியினால் குடும்பவாழ்வு பாதிக்கப்படுவதாக எண்ணுபவர்கள்
33% மிகவும் ஆபத்தான நிலையை உடையோர்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தலைமைப் போதகர்களின் மனிதநேய பண்பு

எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல ; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது –2 கொரி 3 : 5.

தேவனுடைய விலையேறப்பெற்ற அழைப்புக்கு கிடைத்த மிகப்பெரிய பொறுப்பு தலைமைப் பொறுப்பு. விசுவாச கூட்டத்தார் யாவரும் அவருடைய பதவிக்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்க வேண்டும்.அதுபோலவேதான் தலைமைப்பொறுப்பில் இருக்கும் தேவமனிதனும் தங்கள் கடமைகளை நன்றாய் புரிந்துகொள்ளக்கடவோம். ஊழியர்கள் ஆவிக்குரிய ரோபோக்கள் அல்ல. அவர்களுக்கு உணர்வுகளும், பெலவீனங்கள், தவறுதல்களும், ஞானத்தின் சிறுவீழ்ச்சிகளும் சிலசமயங்களில் ஏற்படுவதுண்டு.ஏமாற்றங்களும், கோபங்களும், மனஅழுத்தங்களும் கூட சில வேளைகளில் ஊழியத்தின் பாதையில் இருப்பதுண்டு.ஆகவே தேவ ஜனங்கள் ஊழியத்தை நேசித்து, அதிகமான அன்பும், ஆதரவும் தாருங்கள்.

ஊழியர்கள் அவர்களுடைய சொந்த பலத்தை நம்பியல்ல, எல்லாவற்றையும் செய்ய வல்லவராகிய பரிசுத்தஆவியானவருடைய வல்லமையையும், கிருபையையும் சார்ந்துள்ளனர்.அவர்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. ஜனங்கள் அடிக்கடி யோசிக்கிற ஒரு காரியம் பதவி.ஆனால் ஒரு நற்குணாதிசயம் கொண்ட மனிதனாய் திகழ நம் தகுதி நம்மால் அல்ல.தேவனால் உண்டாயிருக்கிறது. உண்மையான மனிதநேயம் படைத்த ஊழியர் தாழ்மையைத் தரித்து, கர்த்தரைச் சார்ந்திருக்க வேண்டும்



நம் முன்னோர்களாகிய அப்போஸ்தலர்களும், ஆவிக்குரிய வழிகாட்டிகளும் செய்த சில சிறு தவறுதல்கள் அவர்கள் சாதாரண மனிதர்களாய் இருப்பதினால் நேர்ந்திருக்கலாம். ஆயினும் தேவபணி ஒருநாளும் சிதைந்து போவதில்லை. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, மனிதநேயம் கொண்ட தலைமைப்பொறுப்பில் இருக்கும் ஊழியர்களை கனம்பண்ண வேண்டியது விசுவாச மார்க்கத்தார் யாவருடைய கடமையாகும்.

**CONTACT**

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI -TALUK,SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316